INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

# ஐ.வி.டி.பி. மலர்

(தனிச்சுற்றுக்கு மட்டும்)


• டிசம்பர் 2019 - மே 2020

• மொட்டு 12 • மலர் 36 மகளிர் சுய உதவிக்குழு புத்துணர்வு இதழ்












## கொரானா நிவாரண நிதி ₹ 10 இலட்சம்

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர்
உயர்திரு. **சு. பிரபாகர்** இ.ஆ.ப. அவர்களிடம்
ஐ.வி.டி.பி. தலைவர் வழங்கினார்.

## கொரானா ஊரடங்கினால் பாதிக்கப்பட்டோருக்கு ஐ.வி.டி.பி.-ன் நிவாரண பணிகள்

## ₹ 49.36 இலட்சம்

# நிறுவனர்

## இதயத்திலிருந்து

நாம் செல்லும் பாதை சரியாக இருக்கும் போது, நமது இலக்குகளும் எட்டப்படும். அவ்வகையில் ஐ.வி.டி.பி. – யின் மகளிர் மேம்பாட்டுப் பணியில் சென்ற ஆண்டில் பல புதிய முயற்சிகளில் ஈடுபட்டு அதை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம் என்றால் அது மிகையாகாது. இது நம் அனைவரின் கூட்டு முயற்சி. எனவே இதில் பங்களித்த நமது பணியாளர்கள், ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் உரித்தாக்குகிறேன்.

**இவ்வகையில் கடந்த ஆண்டில் நமது சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 13,851 ஆக உயர்ந்துள்ளது. அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 2,56,244 ஆக உயர்ந்துள்ளது. நம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பொருளாதார, சமூக மேம்பாடு அடைய வேண்டும் என்ற இலக்கின் ஒரு பகுதியாக, சென்ற ஆண்டு ரூ. 502 கோடியை வங்கிக் கடனாகவும், ரூ. 340 கோடியை சங்கக் கடனாகவும், ரூ. 28 கோடியை ஐ.வி.டி.பி. கடனாகவும் நம் குழு உறுப்பினர்கள் பெற்று இந்த வருடம் மொத்தம் ரூ. 887.40 கோடியில் தங்கள் பல்வேறு குடும்ப தேவைகளை நிறைவு செய்து கொண்டுள்ளனர்.**

**தன் முன்னேற்றத்தை மட்டுமே நாடாத நம் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள், நாட்டில் ஏற்படும் பேரிடர் சூழ்நிலைகளில் உடனடியாக உதவும் மனப்பான்மையோடு சென்ற ஆண்டு வழங்கிய ரூ. 1 கோடி நிதியைக் கொண்டு நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்க்கொண்டு வருகின்றோம். இதைத் தவிர்த்து குழந்தைகளின் கல்வி உதவி, உறுப்பினர்களின் நலன் சார்ந்த பணிகள், ஊக்கப்பரிசுகள், கல்வி உபகரணங்கள் என பல்வேறு சமூக மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. 10.6 கோடி வழங்கியுள்ளோம்.**

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
(Regd. No. 69/79)



இறுதியாக, தற்போது உலகம் முழுவதும் தனது கொடிய கரங்களை நீட்டி மக்களை கொன்று குவித்து வரும் கொரோனா வைரஸ் பற்றி உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன். இத்தொற்று நோயால் நமது நாடும், தமிழகமும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அரசுகள் பிறப்பித்துள்ள தடை உத்தரவுகளால் நமது இயல்பு வாழ்க்கை முடங்கி போய் உள்ளது. இந்த ஊரடங்கு காலத்தில் வேலையிழந்து வருமானமின்றி உணவுக்காக கஷ்டப்பட்ட இருளர், நரிக்குறவர், மீனவர் மற்றும் கிராமிய கலைஞர்களுக்கு **ரூ. 39.36 இலட்சம்** மதிப்பிலான உணவு பொருட்களையும் கொரோனா பாதுகாப்பு பணிகளுக்காக மாவட்ட நிர்வாகத்திற்கு **ரூ. 10 இலட்சத்தையும்** நாம் வழங்கியுள்ளோம். இருப்பினும் அரசுகள் விதித்துள்ள கட்டுப்பாடுகள் நமது நலனுக்கே என ஏற்றுக்கொண்டு வீட்டிலேயே தனித்திருப்போம். சமூக இடைவெளியை பின்பற்றுவோம், அடிக்கடி கைகளை சுத்தமாக கழுவுவோம். நோய் தொற்றிலிருந்து நம்மையும் நமது குடும்பத்தையும் பாதுகாத்துக் கொள்வோம். இதையும் ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு நம் அருகில் வாழும் நலிவுற்ற மக்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளை செய்ய முன்வருவோம்.

இப்படிக்கு,
என்றும் மக்கள் பணியில்

**குழந்தை பிரான்சிஸ்**
நிறுவனர்/தலைவர்




## ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுவின் விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான

# கல்வி உதவித்தொகை

₹ **25 இலட்சம்**

ஐ.வி.டி.பி மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களில் கணவரை இழந்து மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் உறுப்பினர்களுக்காக இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பயன்பெறும் மாணவர்கள் முந்தைய ஆண்டு நடைபெற்ற பருவ தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியம். தனது தந்தை இல்லாத நிலையில் தன் தாய் சிரமப்பட்டு படிக்க வைப்பதை உணர்ந்து மாணவர்கள் முனைப்புடன் படித்து அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்று உதவித்தொகையை பெறுகின்றனர்.



இவ்வாண்டு கல்லூரியில் பயிலும் **222 குழந்தைகளுக்கு ரூ. 22 இலட்சம்** மதிப்பிலான **கல்வி உதவித் தொகை** வழங்கப்பட்டது.

**மேலும் உதவித் தொகை பெற்ற அம்மாணவர்கள் அனைவருக்கும் தலா ரூ. 1200 மதிப்புள்ள Fastrag Bag ரூ. 2.7 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது.**

**இதுவரை இத்திட்டத்தின் கீழ் ரூ. 1.98 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.**



“ காந்தியின் சிரிப்பு எல்லா பணத்தாள்களிலும் ஒரே மாதிரிதான் இருக்கிறது. நம்முடைய சிரிப்புதான் பணத்தைப் பொறுத்து மாறுகிறது. ”




## இயற்கை எய்திய ஐ.வி.டி.பி மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு

# வாழ்க்கை பாதுகாப்பு நிதி

ஒவ்வொரு ஆண்டும் ஐ.வி.டி.பி மகளிர் சுயஉதவிக் குழுக்களிலிருந்து அவ்வாண்டு மறைந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு அளிக்கும் பொருட்டு அவர்களின் வாரிசுகளுக்கு வாழ்க்கை பாதுகாப்பு நிதி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டிற்கான வாழ்க்கை பாதுகாப்பு நிதி வழங்கும் நிகழ்ச்சி 12.02.2020 அன்று கிருஷ்ணகிரி புனித அன்னாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

**₹ 4.64 கோடி**

இந்த நிகழ்ச்சியில் இந்தியன் வங்கியின் கிருஷ்ணகிரி மண்டல மேலாளர் திரு. **R. திருமாவளவன்** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தமிழ்நாடு கிராம வங்கியின் கிருஷ்ணகிரி மண்டல மேலாளர் திரு. **R. பாஸ்கரன்** அவர்கள் முன்னிலை வகித்தார். அருட்தந்தை **சஞ்சை** *ofm* அவர்கள் இறந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதல் உரை நிகழ்த்தினார்.

**இவ்வாண்டு மறைந்த 841 உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு தலா ரூ. 50,000 மும், நிரந்தர ஊனமுற்ற 8 உறுப்பினர்களுக்கு தலா ரூ. 25,000மும், ஈமச்சடங்கிற்காக தலா ரூ. 5,000மும் என ரூ. 4.64 கோடி வாழ்க்கை பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டது.**

**இதுவரை இந்த திட்டத்தின் மூலம் 6830 மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு ரூ. 32 கோடி வழங்கப்பட்டுள்ளது.**

“ வியர்வை வரும் வரை விளையாடியது அந்த காலம்.
பேட்டரி லோ ஆகும் வரை விளையாடுகிறது இந்த காலம். ”

ஐ.வி.டி.பி மகளிர் சுயஉதவிக் குழுக்களின்

2019ஆம் ஆண்டிற்கான

# இலாபப் பங்கீடு

₹ 68 கோடி



பெண்கள் முன்னேற்றத்தில் பெரும்பங்காற்றி வரும் ஐ.வி.டி.பி நிறுவனத்தின் சிறப்பம்சங்களுள் ஒன்று இலாபப் பங்கீடு ஆகும். குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் குறிப்பிட்ட தொகையினை சேமித்து வருகின்றனர். அவ்வாறு சேமித்த தொகைக்குத் தக்கவாறு குறைந்த வட்டியில் உள்கடனாக பெற்று பயனடைந்து வருகின்றனர். அவ்வட்டி குறிப்பிட்ட கால இடைவெளியில் குழு உறுப்பினர்களுக்குள் இலாபமாக பங்கிடப்படுகிறது. இதுவே இலாபப் பங்கீடாகும்.

இந்த வருடம் ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்த பட்சம் ஒரு ரூபாய்க்கு 23 பைசா முதல் அதிகபட்சமாக 63 பைசா வரை இலாபப் பங்கீடு பெற்று பயனடைந்துள்ளனர்.

**இதுவரை உறுப்பினர்கள் பெற்ற மொத்த இலாப பங்கீடு ₹ 589 கோடி**

**உபரி சேமிப்பு** மற்றும் **இலாபப் பங்கீடு** பெறும் **3870 குழுக்களின்**

உபரி சேமிப்பு ₹ 58.4 கோடி

இலாபப் பங்கீடு ₹ 68 கோடி

**மொத்தம்**

**₹ 126.4 கோடி**



IVDP

" ஓடும்போது விழுந்து விடுவோம் என்று நினைப்பவனை விட, விழுந்தாலும் எழுந்து ஓடுவோம் என்று நினைப்பவனே ஜெயிப்பான்! "



## கஜா புயலால் பாதிக்கப்பட்ட

நாகப்பட்டினம் மாவட்டம் கலங்கரை மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு

ஐ.வி.டி.பி. **ரூ. 6 இலட்சம்** மதிப்பிலான

## புத்தாடை வழங்கி

# பொங்கல் கொண்டாட்டம்

நாகப்பட்டினம், வேதாரண்யம் மற்றும் மயிலாடுதுறை பகுதிகளில் செயல்படும் கலங்கரை நிறுவனமானது கணவரை இழந்த பெண்கள் பொருளாதார ரீதியாக முன்னேற மகளிர் சுய உதவிக்குழுக்களை அமைத்து சேவை செய்து வருகிறது. அந்த உறுப்பினர்கள் கடந்த ஆண்டு கஜா புயலால் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு தார்பாய், கொசுவலை, சோலார் விளக்கு மற்றும் போர்வைகள் போன்றவை நிவாரணமாக வழங்கப்பட்டது. அவர்களில் 1300 விதவை உறுப்பினர்களுக்கு இவ்வாண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஐ.வி.டி.பி நிறுவனத்தின் மூலம் புதிய சேலைகள் வழங்கப்பட்டது. **இவற்றின் மதிப்பு ரூ. 6 இலட்சம் ஆகும்.**



கடந்த ஆண்டில் நாகப்பட்டினம், புதுக்கோட்டை, வேதாரண்யம் போன்ற பகுதிகளிலுள்ள **கஜா புயல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.வி.டி.பி. மூலம் ரூ. 75 இலட்சம் மதிப்பிலான போர்வை, கொசுவலை, தார்பாய் மற்றும் சோலார் விளக்குகள் வழங்கப்பட்டது.**

“ எத்தனை வயதனாலும் சரி உங்களுக்குள் இருக்கும் குழந்தையை மட்டும் மறந்து விடாதீர்கள். அதுவே உங்களை உயிர்ப்புடன் வாழ செய்யும்! ”

# சமுதாயப் பணியில் ஐ.வி.டி.பி






கிருஷ்ணகிரி RC ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற **உலக நோயாளர் தின விழாவில்** கலந்து கொண்ட ஐ.வி.டி.பி தலைவர் இராமன் மகசேசே குழந்தை பிரான்சிஸ் அவர்கள், மாணவர்களுக்கு **புற்றுநோய் மற்றும் சுகாதாரம் பற்றிய அறிவுரைகள் வழங்கியதுடன்** மாணவர்களிடம் பொது உடல்நலன் சார்ந்த கேள்விகளைக் கேட்டு சரியான பதில் கூறிய **மாணவர்களுக்கு ரூ. 30 ஆயிரம் மதிப்பிலான பரிசுகள் மற்றும் கேக்** வழங்கினார்.

## தூய்மைப் பணியாளர்களுக்கு நிதியுதவி

**கிருஷ்ணகிரி நகராட்சியில் பணியாற்றும் 97 தூய்மை பணியாளர்களுக்கு** களப்பணியின் போது அணிந்து கொள்ள ஏதுவான மழை மற்றும் குளிரில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையிலான **ஜெர்கின்** மற்றும் **சேலை** வழங்கப்பட்டது. **இவற்றின் மதிப்பு ரூ. 1 இலட்சம் ஆகும்.**





**மருத்துவமனை மற்றும் பள்ளிகளில் பணியாற்றும் 24 தூய்மை பணியாளர்களுக்கு தலா ரூ. 10,000 என ரூ. 2.4 இலட்சம் ஐ.வி.டி.பி. நிதியுதவி**

இதுவரை தூய்மைப் பணியாளர்களுக்காக **ஐ.வி.டி.பி. நிறுவனம் வழங்கியுள்ள உதவிகளின் மொத்த மதிப்பு ₹ 11.5 இலட்சமாகும்.**



“ இந்த உலகில் யாரும் யாருக்காகவும் இல்லை என்பதை புரிந்து கொண்டாலே... வீண் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும் குறைந்து விடும். ”



## மேகாலயா மாநிலத்தில் மின்வசதியற்ற மலைக்கிராம மாணவர்களுக்கு

# ரூ.11 இலட்சம் மதிப்பிலான உதவிகள்



இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான திரிபுரா மற்றும் மேகாலயாவில் உள்ள குழந்தைகளுக்கு ஐ.வி.டி.பி. நிறுவனம் பல்வேறு கல்விச் சேவைகளை வழங்கி வருகிறது. அம்மாநிலங்களில் வாழும் மக்கள் அடிப்படை வசதியின்றி மிகுந்த வறுமை நிலையில் வாழ்ந்து வருகின்றனர். எனவே அம்மக்களுக்கு உதவும் பொருட்டு மேகாலயா மாநிலத்தில் இந்திய பங்களாதேஷ் நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மக்கன்ரூ என்ற மலைக்கிராமத்தின் சுற்றுப்புற குக்கிராமங்களில் வாழும் குழந்தைகளுக்கு **ரூ. 6 இலட்சம்** மதிப்பிலான 1000 சோலார் மின்விளக்குகளும், **ரூ. 5 இலட்சம்** மதிப்பிலான அறிவியல் ஆய்வகம், தொலைக்காட்சி பெட்டிகள், குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் குளிர்கால ஆடைகள் போன்றவை வழங்கப்பட்டது.

**இங்குள்ள மலைவாழ் மக்கள் நலனுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும் அப்பகுதியில் செயல்படும் ஹோலிகிராஸ் பள்ளியின் வாயிலாக இதுவரை ரூ. 45 இலட்சம் மதிப்பிலான பல்வேறு சேவைகளை ஐ.வி.டி.பி. நிறுவனம் வழங்கியுள்ளது.**

## குழந்தைகள் இல்லங்களுக்கு குளிர்காலத்தில் குளிக்க ஏதுவாக

# சோலார் ஹீட்டர்கள் நன்கொடை

₹ 6 இலட்சம்



வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா
**லிட்டில் பிளவர் மாணவர் இல்லத்திற்கு**
3000 லிட்டர் கொள்ளளவு உடைய
**ரூ. 3.6 இலட்சம் மதிப்பிலான**
**சோலார் ஹீட்டர்**



வேலூர் மாவட்டம்,
**மரியன்னை மாணவிகள் இல்லத்திற்கு**
2000 லிட்டர் கொள்ளளவு உடைய
**ரூ. 1.8 இலட்சம் மதிப்பிலான**
**சோலார் ஹீட்டர்**




மதகொண்டபள்ளி
**தூய லூர்து அன்னை**
**மருத்துவமனைக்கு**
**ரூ. 60 ஆயிரம் மதிப்பிலான**
**சோலார் ஹீட்டர்**



“ தன்னை விட அடுத்தவன் சுகமாக வாழ்கிறானே... என்ற எண்ணம்தான்,
எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாக இருக்கிறது..! ”

# கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு புதிய வகுப்பறைகள் கட்ட ஐ.வி.டி.பி.யின் பங்களிப்பு

₹ 50 இலட்சம்

கிருஷ்ணகிரி அரசு பெண்கள் கலைக் கல்லூரியில் பயிலும் ஏழை மாணவிகளின் நலனுக்காக எண்ணற்ற பணிகளில் ஐ.வி.டி.பி ஈடுபட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக அவர்களுக்கு தொழில் திறன் பயிற்சிகளும், கடந்த 5 ஆண்டுகளாக திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி பேராசிரியர்களைக் கொண்டு முதலாம் ஆண்டு மாணவிகளுக்கு அடிப்படை ஆங்கிலப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.



ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் பங்களிப்பான **ரூ. 50 லட்சத்திற்**கான வரைவோலையை, ஐ.வி.டி.பி. நிறுவனத் தலைவர் திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் உயர்திரு. **S. பிரபாகர்**, இ.ஆ.ப. அவர்களிடம் வழங்கினார்.



அதைத் தொடர்ந்து இவ்வாண்டு மாணவிகளின் நலன் கருதி 10 தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. மேலும் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் வேண்டும் என கல்லூரி நிர்வாகம் கேட்டுக் கொண்டதையடுத்து **அரசின் தன்னிறைவுத்திட்டம் மூலம் ரூ.50 இலட்சமும், ஐ.வி.டி.பி மூலம் ரூ.50 இலட்சமும்** வழங்கி வகுப்பறைக் கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இதுவரை இக்கல்லூரிக்கு ரூ. 1.14 கோடி மதிப்பிலான பல்வேறு பணிகள் ஐ.வி.டி.பி. மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

“ நாம் வாழும் வரை நம்மை யாரும் வெறுக்கக்கூடாது...
வாழ்ந்து முடித்தபின் நம்மை யாரும் மறக்ககூடாது... அதுதான் நம் வாழ்வின் வெற்றி... ”

# பள்ளிக் கல்வியை எளிமையாக்க மாணவர்களுக்கு ரூ. 5.25 இலட்சம் மதிப்பில் LED TV நன்கொடை




கிருஷ்ணகிரி மாவட்டம், பெரிய சக்கனாவூர்
**ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி**
மாணவர்கள் ஒலி–ஒளி காட்சி மூலம்
கல்வி பயில ஏதுவாக
**ரூ. 20,000 மதிப்பிலான**
**LED TV**




தர்மபுரி மாவட்டம்,
**தொப்பூர் அரசு மேல்நிலைப்பள்ளி**
மாணவர்களின் நலன் கருதி அப்பள்ளிக்கு
**ரூ. 2 இலட்சம்** மதிப்பிலான
**6 LED TV**
**& மைக் ஸ்டேண்ட்**




கிருஷ்ணகிரி மாவட்டம்,
கோட்டையூரில் செயல்படும்
**ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளி**க்கு
**ரூ. 1.8 இலட்சம்** மதிப்பிலான
**5 LED TV**




தர்மபுரி மாவட்டம், உம்மியாம்பட்டு,
வெள்ளோலை போன்ற ஊர்களிலுள்ள
**அரசு பள்ளிகளுக்கு**
**ரூ. 1.2 இலட்சம்** மதிப்பிலான
**CCTV Camera & LED TV**

**இதுவரை CCTV Camera & LED TV ஆகியவற்றிற்காக ஐ.வி.டி.பி. ரூ. 8 இலட்சம் செலவிட்டுள்ளது.**



“ பேசிய வார்த்தைகளால் நீ அவமானப்படும் போதுதான் புரிந்து கொள்வாய்...
பேசாத வார்த்தைகள்தான் உன் மானம் காக்குமென்று...! ”

# கொரோனா நிவாரண நிதி

₹ 49.36 இலட்சம்

நாடு முழுவதும் ஒவ்வொரு முறையும் ஏற்படும் பேரிடர் நிகழ்வுகளின் போதும் ஐ.வி.டி.பி. நிறுவனமும் அதன் உறுப்பினர்களும் உடனடியாக தங்களின் பங்களிப்பை வழங்கி மக்களின் துயர் துடைக்கும் பணியில் தங்களையும் இணைத்துக் கொண்டு செயலாற்றி வருகின்றனர். அவ்வகையில் உலகம் முழுவதும் பரவி பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்து வரும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தற்போது இந்தியாவிலும் தமிழகத்திலும் பரவி வருவது நாம் அறிந்த ஒன்று. அவ்வைரஸ் தொற்றை எதிர்கொள்ள அரசு பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**இவ்வாறு அரசு எடுக்கும் முன்முயற்சிகளுக்கு உதவும் பொருட்டு கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகத்தின் கொரோனா தடுப்பு பணிகளுக்காக ஐ.வி.டி.பி. நிறுவனம் ரூ. 10 இலட்சத்தை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் வழங்கியது.**




அதைத் தொடர்ந்து **'ஒளிரும் கிருஷ்ணகிரி பவுண்டேசன்'** என்ற அமைப்பினர் கிருஷ்ணகிரி நகரில் கொரோனா தடுப்பு பணிகளில் ஈடுபடும் காவல்துறை, மருத்துவத்துறை, சுகாதாரத்துறை மற்றும் வருவாய்த்துறை பணியாளர்களுக்கு மூன்று வேளையும் உணவு தயாரித்து வழங்கும் பணியில் ஐ.வி.டி.பி. நிறுவனமும் தன்னை இணைத்துக் கொண்டு, **தனது பங்களிப்பாக ரூ. 2 லட்சத்திற்கான காசோலையை ஐ.வி.டி.பி. நிறுவனத் தலைவர் திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒளிரும் கிருஷ்ணகிரி அமைப்பின் பொருளாளர் மற்றும் உறுப்பினர்களிடம் வழங்கினார்.**

# கொரோனா நிவாரண உதவி

தொற்று நோயால் இந்தியாவிலும், தமிழகத்திலும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில் மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கே அல்லல்பட்டு வருகின்றனர். அதிலும் குறிப்பாக இருளர், பழங்குடியினர், நரிக்குறவர் மற்றும் மலைவாழ் மக்கள் மிகுந்த இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

அன்றாட உணவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில்
மக்களுக்கு தேவையான **25 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு** மற்றும்
**1 லிட்டர் சமையல் எண்ணெய்** போன்ற நிவாரணப் பொருட்களை
**மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன்**
ஐ.வி.டி.பி. தலைவர் ''ராமன் மகசேசே'' குழந்தை பிரான்சிஸ்
அவர்கள் நேரில் சென்று வழங்கினார்.

**முதற்கட்டமாக** கொரோனா பாதிப்பினால் தவித்த
**679 இருளர்** மற்றும் **நரிக்குறவர் குடும்பங்களுக்கு**
**₹ 8.5 லட்சம்** மதிப்பிலான
**நிவாரண உணவுப் பொருட்களை** ஐ.வி.டி.பி. வழங்கியது.






**கிருஷ்ணகிரி மாவட்டத்தின் கடைக்கோடி கிராமங்களான அஞ்செட்டி வட்டத்தில் உள்ள கோட்டையூர், சிவபுரம், நூறுந்துசாமிமலை, சின்னமல்லஹள்ளி, பிலிகுண்டுலு ஆகிய பகுதிகளில் உள்ள 242 குடும்பங்களுக்கும், சூளகிரி வட்டத்தில் உள்ள கரியசந்திரம், சிகரலப்பள்ளி கேட், ராமன் தொட்டி, கும்மாளம், பெரியகுதி, சின்னகுதி, தண்ணீர் குண்டலப்பள்ளி, நாக்குனேரி மலை ஆகிய பகுதிகளில் உள்ள 437 குடும்பங்களுக்கும் ஐ.வி.டி.பி. தலைவர் ''ராமன் மகசேசே'' குழந்தை பிரான்சிஸ் அவர்கள் நேரில் சென்று வழங்கினார்.**



" நேரம் சரியில்லை, காலம் சரியில்லை, நிலைமை சரியில்லை – வெற்று பேச்சு
நேரம் போதவில்லை – வெற்றியின் பேச்சு. "

இரண்டாம் கட்டமாக இருளர் வசிக்கும் இடங்களான வேப்பனப்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட **பில்லன குப்பம், பேட்டப்பனூர், குப்பச்சிப்பாறை, வள்ளிநகர், பெரியமனவாரனப்பள்ளி, உண்டியல்நத்தம், கே.கொத்தூர், லட்சுமிபுரம் மற்றும் கடவரப்பள்ளி** கிராமங்களில் வசிக்கும் **220 இருளர் குடும்பங்களுக்கும்,** அஞ்செட்டி வட்டத்திற்குட்பட்ட **மிலிதிக்கி, எருமத்தனஹள்ளி, பெல்லட்டி, மஞ்சு ரோடு, தொட்டமஞ்சு, கெம்பகரை, நாட்றாம்பாளையம் புதூர், வண்ணபுரம், மாசனட்டி மற்றும் கொடகரை கிராமங்களைச் சேர்ந்த 304 இருளர் குடும்பங்களுக்கும் ரூ.6.3 இலட்சம்** மதிப்புள்ள நிவாரணப்பொருட்கள் வழங்கப்பட்டது.

**இரண்டாம் கட்டமாக**

## 524 இருளர் குடும்பங்களுக்கு கொரோனா நிவாரணமாக ₹ 6.3 இலட்சம் மதிப்பிலான உணவுப் பொருட்கள்



**மூன்றாம் கட்டமாக**

## 866 இருளர் குடும்பங்களுக்கு கொரோனா நிவாரணமாக ₹ 11 இலட்சம் மதிப்பிலான உணவுப் பொருட்கள்



மூன்றாம் கட்டமாக **சூளகிரி ஒன்றியம் உத்தனப்பள்ளி, சானமாவு பீர்ஜேபள்ளி, உலகம், பிக்கனப்பள்ளி, பொன்னல்நத்தம ஆகிய கிராமங்களில் உள்ள 123 இருளர் குடும்பங்களுக்கும், கிருஷ்ணகிரி ஒன்றியம் ஆலப்பட்டி, கங்கலேரி, இட்டிக்கல் அகரம், பூவத்தி, சோக்காடி, வெலகலஹள்ளி, மகாராஜகடை, நாரலப்பள்ளி, ஏக்கல்நத்தம் ஆகிய கிராமங்களிலும், காவேரிப்பட்டினம் ஒன்றியம் பனகமுட்லு, ஜகதாப், தேர்பட்டி ஆகிய கிராமங்களில் வசிக்கும் 442 இருளர் குடும்பங்களுக்கும், கெலமங்கலம் ஒன்றியம் போடம்பட்டி, ஒடையாண்டஹள்ளி, பழையூர், திம்ஜேபள்ளி, முத்தம்பட்டி, உள்ளுகுறுக்கை, உ.குரும்பரபள்ளி, உ.கொத்தபள்ளி, நீலகிரி காலணி போன்ற கிராமங்களில் வசிக்கும 301 இருளர் குடும்பங்களுக்கும் ரூ.11 இலட்சம்** மதிப்பிலான உணவுப் பொருட்கள் நிவாரணமாக வழங்கப்பட்டது.

நான்காம் கட்டமாக

## ஐ.வி.டி.பி. மகளிர் சுயஉதவிக்குழு தொகுதியளவு கூட்டமைப்பின்

# 402 பணியாளர்களுக்கு ₹ 5 இலட்சம் மதிப்பிலான உணவுப் பொருட்கள்





நான்காம் கட்டமாக ஐ.வி.டி.பி. மகளிர் சுயஉதவிக்குழு தொகுதியளவு கூட்டமைப்புகளில் பணியாற்றும் **402 பணியாளர்களுக்கு ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம் 25 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு, 1 லிட்டர் சமையல் எண்ணெய் ஆகியவை அடங்கிய தலா ரூ. 1250 மதிப்புள்ள ரூ. 5 இலட்சம்** மதிப்பிலான நிவாரணப் பொருள்களை ஐ.வி.டி.பி. தலைவர் இராமன் மகசேசே குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கினார்.

ஐந்தாம் கட்டமாக

## காரிமங்கலம் அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவிகளுக்கு

# கொரோனா நிவாரணமாக ₹ 2 இலட்சம் மதிப்பிலான உணவுப் பொருட்கள்



அதைத் தொடர்ந்து காரிமங்கலம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் பயிலும் மாணவிகளில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள **200 ஏழை மாணவிகளுக்கு** நிவாரணப் பொருட்கள் வழங்க கல்லூரி முதல்வர் திருமதி. கீதா அவர்கள் கேட்டுக் கொண்டதை ஏற்று **ஐ.வி.டி.பி நிறுவனம் மூலம் 200 மாணவிகளுக்கு தலா ரூ. 1000 மதிப்புள்ள 25 கிலோ அரிசி ரூ.2 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது**. இந்த நிவாரணப் பொருட்களை ஐ.வி.டி.பி நிறுவனர் இராமன் மகசேசே **குழந்தை பிரான்சிஸ்** மற்றும் கல்லூரிமுதல்வர் திருமதி. **கீதா** ஆகியோர் மாணவிகளின் இருப்பிடங்களான **காவேரிப்பட்டினம், காரிமங்கலம், பாலக்கோடு, அதியமான் கோட்டை, தர்மபுரி, கம்பைநல்லூர்** ஆகிய ஊர்களுக்கு நேரடியாக சென்று வழங்கினர்.






“ வேண்டாம் என்று தூக்கி எறியப்பட்ட விதை கூட மரமாக வளர்ந்து வருகிறது. உன்னை வேண்டாம் என்று தூக்கி எறிந்தவர் மத்தியில் இருந்து எழுந்து வா! வாழ்க்கையில் உன்னை வெல்ல யாரும் இல்லை!! ”



ஆறாம் கட்டமாக

**கிருஷ்ணகிரி** மற்றும் **தர்மபுரி மாவட்டங்களைச்** சேர்ந்த

# 321 கிராமிய கலைக் குழுவினர் குடும்பங்களுக்கு கொரோனா நிவாரணமாக ₹ 3.75 இலட்சம் மதிப்பிலான உணவுப் பொருட்கள்

கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கிராமிய கலைக்குழுவினர், கோலாட்டக்குழுவினர் மற்றும் பம்பை குழுவினர் கொரோனா ஊரடங்கால் பண்டிகை, கோவில் விழாக்கள், கச்சேரிகள் எதுவும் நடைபெறாத சூழ்நிலையில் உணவுப் பொருட்களுக்காக சிரமப்படுவதை BSNL நிறுவனத்தில் பணிபுரியும் பொறியாளர் திரு. **ரமேஷ்** என்பவர் வாயிலாக அறிந்த ஐ.வி.டி.பி நிறுவனர் இராமன் மகசேசே **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் **321 கிராமிய கலைக்குழுவினர் குடும்பங்களுக்கு ரூ.3.75 இலட்சம்** மதிப்பிலான உணவுப்பொருட்கள் அடங்கிய தொகுப்பை கலைக்குழு உறுப்பினர்கள் வசிக்கும் காவேரிப்பட்டினம், பாலக்கோடு, பாப்பாரப்பட்டி, பிக்கிலி, நல்லம்பள்ளி ஆகிய கிராமங்களுக்கு நேரடியாக சென்று வழங்கினார்.

ஏழாம் கட்டமாக

**கிருஷ்ணகிரி மாவட்டத்தைச்** சேர்ந்த

# 49 திருநங்கைகளுக்கு கொரோனா நிவாரணமாக ₹ 61,000 மதிப்பிலான உணவுப் பொருட்கள்



கிருஷ்ணகிரி நகர் மற்றும் காவேரிப்பட்டினம் பகுதிகளை சேர்ந்த திருநங்கைகள் கொரோனா ஊரடங்கால் உணவுப் பொருட்களுக்காக சிரமப்படுவதை அறிந்த ஐ.வி.டி.பி நிறுவனர் இராமன் மகசேசே **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் கிருஷ்ணகிரி பாஞ்சாலியூரில் வசிக்கும் **39 திருநங்கைகளுக்கும்** காவேரிப்பட்டினம் நகரில் வசிக்கும் **10 திருநங்கைகளுக்கும் ரூ.61 ஆயிரம்** மதிப்பிலான உணவுப்பொருட்கள் அடங்கிய தொகுப்பை நேரில் சென்று வழங்கினார்.

இதுவரை ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் வாயிலாக
**3041 குடும்பங்களுக்கு ₹ 37.36 இலட்சம்** மதிப்புள்ள உணவுப் பொருட்களும்
**கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ₹ 12 இலட்சம்** என மொத்தம்

## ₹ 49.36 இலட்சம்

மதிப்புள்ள நிவாரணப் பணிகளை ஐ.வி.டி.பி. நிறுவனம் மேற்கொண்டுள்ளது என ஐ.வி.டி.பி. நிறுவனத் தலைவர் தெரிவித்தார்.

“ எத்தனை படிகள் என்று மலைக்காதீர்கள் எல்லாப்படிகளும் கடக்கக்கூடியவையே. உள்ளத்தில் உள்ள நம்பிக்கையே செயலில் வெற்றியைத் தருகிறது. ”

பெற்றோரை இழந்த கல்லூரி மாணவர்களுக்கு

# கல்வி உதவித் தொகை

# ₹ 22.6 இலட்சம்

ஐ.வி.டி.பி. கடந்த 5 வருடங்களாக பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ இழந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பெற்றோர் இருவரையும் இழந்த மாணவர்களுக்கு ரூ.10000மும், ஒருவரை இழந்த மாணவர்களுக்கு ரூ.5000 முதல் ரூ.7500 வரை வழங்கப்படுகிறது. கடந்த 5 மாதங்களில் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த மாணவர்கள் விவரம்:



திருச்சி, ஹோலிகிராஸ் கல்லூரியில் பயிலும்
**93 மாணவிகளுக்கு ரூ.6.1 இலட்சம்**
கல்வி உதவித் தொகை




புதுக்கோட்டை, அக்சீலியம் கல்வியியல் கல்லூரியில் பயிலும்
**13 மாணவிகளுக்கு ரூ.1.3 இலட்சம்**
கல்வி உதவித் தொகை



“ உன்னிடம் சண்டை போடும் இதயத்தை விட்டு விடாதே... அவர்களை விட உன்னை வேறு யாரும் உண்மையாக நேசிக்க முடியாது..! ”



மெட்டலா
லொயோலா
கல்லூரியில் பயிலும்
23 மாணவர்களுக்கு
**ரூ.2 இலட்சம்**
கல்வி
உதவித் தொகை

வேலூர், அக்சீலியம் கல்லூரியில் பயிலும்
**127 மாணவிகளுக்கு ரூ. 8.22 இலட்சம்**
கல்வி உதவித் தொகை



ஏலகிரி, டான்போஸ்கோ கல்லூரியில் பயிலும்
**80 மாணவர்களுக்கு ரூ.5 இலட்சம்** கல்வி உதவித் தொகை

இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 773 மாணவர்கள் ரூ. 51.6 இலட்சம் மதிப்பிலான உதவித்தொகையை பெற்று பயனடைந்துள்ளனர். கடந்த 5 வருடங்களாக செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின்கீழ் இதுவரை மாணவர்கள் நலனுக்காக ரூ. 1.62 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

“ தவறான வழியில் செல்பவனை வாழ்த்தியும்,
நேர்மையான வழியில் சென்று தோற்பவனை தாழ்த்தியும் பேசும் சமுதாயம்தான்
குற்றங்களுக்கு காரணம்..! ”



# திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி.யின் நலத்திட்டங்கள்

## ஏழை மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை :

கல்லூரியில் பயிலும் மாணவர்கள் தங்களுடன் பயிலும் ஏழை மாணவர்களுக்கு உதவ வேண்டும், கல்லூரி பருவத்திலேயே அவர்களுக்கு சேவை மனப்பான்மை வளர வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஏழை மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டமானது ஏற்படுத்தப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளாக திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு கல்லூரி மாணவர்கள் அனைவரும் இணைந்து **மாணவர்களின் பங்களிப்பாக ரூ. 3 லட்சத்தை திரட்டியிருந்தனர். அதற்கு இணையான தொகையாக ரூ. 3 இலட்சம் ஐ.வி.டி.பி மூலம் வழங்கப்பட்டு 120மாணவர்களுக்கு தலா ரூ. 5,000** என **மொத்தம் ரூ.6 இலட்சம்** பகிர்ந்தளிக்கப்பட்டது.





“ பிரச்சனைகளை நேராகவே எதிர்கொள்ள வேண்டும் என்கிற அவசியமில்லை... நாம் ஒதுங்கிச்சென்றாலே பிரச்சனைகள் நம்மை விட்டு ஒதுங்கிவிடும்... ”

மாணவர்களில் மிகவும் ஏழ்மை நிலையில் கல்லூரிக் கட்டணம் செலுத்த இயலாத மாணவர்களை தேர்வு செய்வதுடன், உதவித்தொகை அளிப்பது வரையிலான அனைத்து ஏற்பாடுகளையும் அக்கல்லூரி மாணவர்களே ஏற்று நடத்துவது இத்திட்டத்தின் சிறப்பாகும்.



மேலும் அவர்களில் ஒரு மாணவி தன்னுடைய முதல் மாதச்சம்பளத்தை இந்த திட்டத்திற்காக வழங்கியதை அறிந்து அந்த மாணவிக்கு ஐ.வி.டி.பி. ரூ. 50 ஆயிரம் ரொக்கப்பரிசு மற்றும் விருது வழங்கி பாராட்டியது.

## மாணவிகளுக்கு தங்க காதணிகள் மற்றும் TITAN வாட்ச் பரிசு :



மேலும் ஐ.வி.டி.பி தலைவர் அங்குள்ள மாணவிகளில் **இதுவரை தங்க காதணிகள் அணியாத 20 மாணவிகளுக்கு தங்க காதணிகள் வழங்கினார். இவற்றின் மதிப்பு ரூ. 1.5 இலட்சம் ஆகும்.**

மேலும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டத்தின் போது **வாட்ச் இல்லாத மாணவிகளை தேர்வு செய்து 91 மாணவிகளுக்கு ரூ. 750 மதிப்பில் TITAN வாட்ச் பரிசாக வழங்கினார். இவற்றின் மதிப்பு ரூ. 68,000 ஆகும்.**

**இவ்வருடம் இக்கல்லூரியில் கல்வி உதவித் தொகை, ஊக்கப்பரிசுகள், காதணிகள், வாட்ச், புத்தகப்பைகள் மற்றும் LCD Projector போன்று பணிகளுக்காக ரூ. 19.28 இலட்சம் ஐ.வி.டி.பி. வழங்கியுள்ளது.**

**இதுவரை ஐ.வி.டி.பி. மூலம் ரூ. 54 இலட்சம் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

# கனினி ஆய்வகம்

மற்றும்

# SMART BOARD PROJECTOR நன்கொடை



எலத்தகிரி- புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளிக்கு

**ரூ. 1 இலட்சம் மதிப்பில் SMART BOARD PROJECTOR நன்கொடை**




தாசரப்பள்ளி தூய சகாயமாதா நடுநிலைப்பள்ளிக்கு

**ரூ. 2.72 இலட்சம் மதிப்பில் 10 கணிணிகள் ஐ.வி.டி.பி நன்கொடை**



“அதிகமாக கோபம் வருகிறது என்றால் அவர்கள் நேர்மையானவர்கள் என்று அர்த்தம் ஏனென்றால், ஏமாற்றங்களை தாங்கும் சக்தி நேர்மையாளர்களிடம் இருப்பதில்லை.”

ஐ.வி.டி.பி மூலம் இவ்வாண்டு
₹ **6.3 இலட்சம்**
மதிப்பில்

**கணினி ஆய்வகங்களும், SMART BOARD PROJECTOR-ம் பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.**




திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி சமூக பணித்துறைக்கு
**ரூ. 1.6 இலட்சம்** மதிப்பிலான 2 SMART BOARD PROJECTORகள் நன்கொடை.



தர்மபுரி, டான்போஸ்கோ கல்வியியல் கல்லூரிக்கு
ரூ. 1 இலட்சம் மதிப்பில்
SMART BOARD PROJECTOR நன்கொடை.

இதுவரை கணினி ஆய்வகம் மற்றும் SMART BOARD PROJECTOR ஆகியவற்றிற்காக ஐ.வி.டி.பி.
**₹ 1.6 கோடி**
வழங்கி உள்ளது.

"எதிரிகளின் அவமானங்களை காட்டிலும்
நெருங்கியவர்களின் அன்புக்காகவே சுயமாரியதையை அதிகம் இழக்கிறோம்."

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

# பள்ளி மாணவர்களுக்கு வாட்டர் பாட்டில்கள்

₹ 3.5 இலட்சம்



கனகமுட்லு
அரசு மேல்நிலைப்பள்ளியில்
பயிலும் 320 மாணவர்களுக்கு
**ரூ. 56,000 மதிப்பில்**
**வாட்டர்பாட்டில்கள்**



தர்மபுரி மாவட்டம், விமலாபுரி
அமல அன்னை மேல்நிலைப்பள்ளியில்
பயிலும் மாணவர்களுக்கு
**ரூ. 1.1 இலட்சம் மதிப்பில்**
**600 வாட்டர்பாட்டில்கள்**



கிருஷ்ணகிரி,
புனித அன்னாள் மகளிர் துவக்கப்பள்ளியில்
பயிலும் மாணவிகளுக்கு
**ரூ. 1.9 இலட்சம் மதிப்பில்**
**1100 மாணவிகளுக்கு**
**வாட்டர்பாட்டில்கள்**

**இதுவரை பல்வேறு பள்ளிகளுக்கு ரூ. 31 இலட்சம் மதிப்பிலான வாட்டர்பாட்டில்கள் ஐ.வி.டி.பி. மூலம் வழங்கப்பட்டுள்ளது.**

# பள்ளி மாணவர்களுக்கு
## ரூ. 40 ஆயிரம் மதிப்பிலான
# தேர்வு அட்டைகள்




கனகமுட்லு அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் தேர்வு எழுத ஏதுவாக **320 தேர்வு அட்டைகள் ரூ.29 ஆயிரம் மதிப்பில்** வழங்கப்பட்டது.



மதகொண்டப்பள்ளி இந்திரா காந்தி குழந்தைகள் இல்லத்தில் தங்கி பயிலும் **120 மாணவிகளுக்கு ரூ. 11 ஆயிரம் மதிப்பில்** தேர்வு அட்டைகள் வழங்கப்பட்டது.

“ ஒவ்வொரு அறிவுரைக்குப் பின்னும் ஓர் அர்த்தம் உள்ளது.
அது அக்கறை அல்லவது பொறாமை. ”

## பையூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ரூ. 50,000 மதிப்பிலான

# அறிவியல் ஆய்வக உபகரணங்கள் நன்கொடை



பையூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் ஆய்வகம் அமைக்க தேவையான உபகரணங்கள் வழங்க வேண்டும் என பள்ளித் தலைமை ஆசிரியர் கேட்டுக் கொண்டதற்கிணங்க **ரூ. 50,000** மதிப்பிலான **அறிவியல் ஆய்வக உபகரணங்கள்** வழங்கப்பட்டது.

# விளையாட்டு வீரரை பாராட்டி

## ரூ.25 ஆயிரம் ஊக்கப்பரிசு

தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரியும் திரு.யுவராஜ், மூத்தோர் தடகளப் போட்டியில் சிறந்து விளங்கியதோடு சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளிலும் பங்கேற்று வெற்றிப் பெற்றுள்ளார். அவரின் விளையாட்டு திறனை பாராட்டி ஐ.வி.டி.பி தலைவர் **ரூ.25 ஆயிரம்** ஊக்கப்பரிசு வழங்கினார்.





" ஒருவனுடைய மனம் தூய்மையாக இல்லாவிட்டால் பணமோ, வலிமையோ, அழகோ அவனுக்குப் பயன்படாது. "

# பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ. 4.6 இலட்சம் மதிப்பிலான
# ஊக்கப்பரிசுகள்



சேலம்
செயின்ட் ஜான்ஸ் மெட்ரிக்குலேசன்
பள்ளியில் பணிபுரியும்
**90 ஆசிரியர்களுக்கு**
**ரூ. 3.6 இலட்சம் மதிப்பிலான**
**பட்டர்பிளை டின்னர் செட்**
பரிசாக வழங்கப்பட்டது.



கிருஷ்ணகிரி,
புனித அன்னாள் மெட்ரிக்குலேசன்
பள்ளியில் பணிபுரியும்
**34 ஆசிரியர்களுக்கு**
**ரூ. 58 ஆயிரம் மதிப்பிலான**
**பட்டர்பிளை பாக்ஸ்**
பரிசாக வழங்கப்பட்டது.



தர்மபுரி, அக்சீலியம் பள்ளி ஆசிரியர்களுக்கு
**ரூ. 37 ஆயிரம் மதிப்பில்** சீருடை **(OVER COAT)** வழங்கப்பட்டது.

“ எவர் பேசுவதையும் கேட்டுக்கொள்; ஆனால் சிலரிடமே பேச்சு கொடு.
எவர் துன்பத்தையும் தெரிந்து கொள்; ஆனால் உன் கருத்தை கூறிவிடாதே.”

# கிறிஸ்துமஸ் பெருவிழா கொண்டாட்டத்திற்காக

## ரூ. 2.8 இலட்சம் மதிப்பிலான பரிசுகள்



வேலூர் மரியன்னை இல்ல மாணவிகளுக்கு கிறிஸ்துமஸ் பெருவிழா பரிசாக ஐ.வி.டி.பி மூலம் ரூ. 78,000 மதிப்பில் துணிகள் எடுத்துச்செல்ல ஏதுவான பைகள் நன்கொடையாக வழங்கப்பட்டது.



கிருஷ்ணகிரி, புனித அன்னாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் துவக்கப்பள்ளியில் பயிலும் 3600 மாணவிகளுக்கு கிறிஸ்துமஸ் பரிசாக ரூ. 61,000 மதிப்பில் கேக் வழங்கப்பட்டது.



“ வேண்டாம் என்று அடிக்கடி சொல்லத் தெரிந்தவன் தான்...
வாழ்நாள் பூராவும் மனத்தாலும் உடலாலும் வலிமை உள்ளவனாக இருப்பான். ”




பர்கூரில் செயல்படும் **St. Joseph** மெடிக்கல் சென்டர் மூலம் கிருஷ்ணகிரி மற்றும் பர்கூரில் நடைபெற்ற கிறிஸ்து பிறப்பு பெருநாள் கொண்டாட்டத்தின் போது அங்குள்ள ஏழை எளிய மக்களுக்கு ஐ.வி.டி.பி மூலம் ரூ. 1.2 இலட்சம் மதிப்பிலான போர்வை மற்றும் பொருள்களை எடுத்துச் செல்ல உதவும் பைகள் வழங்கப்பட்டன.



அத்திமுகம் **ARC** இல்ல மாணவர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசாக ரூ. 2 ஆயிரம் மதிப்பிலான கேக் வழங்கப்பட்டது.

“ இதயபூர்வமாய் வெற்றி பெறவே பிறந்தவர்கள் என நம்புகிறவர்கள்;
மிக எளிதாக உச்சிக்கு சென்று விடுகிறார்கள்; அதிர்ஷ்டமில்லாதவர்கள் என்று
இதயபூர்வமாக நம்புகிறவர்கள்; அப்படியே தோற்றுப்போய் விடுகிறார்கள். ”

## பல்வேறு பள்ளி விழாக்களில் மாணவர்களுக்கு

# ரூ. 55 ஆயிரம் மதிப்பிலான தங்க நாணயங்கள் பரிசு



சிவகங்கை மாவட்டம், **கண்டனூரில் உள்ள சிட்டாள் ஆச்சி உயர்நிலைப்பள்ளி** ஆண்டு விழாவில் 2018-2019 கல்வியாண்டில் சிறப்பிடம் பெற்ற 10 மாணவர்களுக்கு தலா 1 கிராம் மதிப்புள்ள **தங்க நாணயங்களை ஐ.வி.டி.பி. தலைவர் பரிசாக வழங்கினார்.**

கிருஷ்ணகிரி, **புனித அன்னாள் மெட்ரிக்குலேசன் பள்ளி** ஆண்டு விழாவில் நடைபெற்ற வினாடிவினா நிகழ்ச்சியில் சிறப்பாக பதில் கூறிய மாணவர்களுக்கு **தலா 1 கிராம் மதிப்புள்ள தங்க நாணயங்களை ஐ.வி.டி.பி. தலைவர் பரிசாக வழங்கினார்.**



# ஏலகிரி தொன்போஸ்கோ கல்லூரி மாணவர்களுக்கான ஐ.வி.டி.பி. -யின் நலத்திட்டங்கள்

## ரூ. 1 இலட்சம் மதிப்பில் மதிய உணவுத்திட்டம்



திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரியில் உள்ள தொன்போஸ்கோ கல்லூரி மாணவர்களுக்காக மதிய உணவுத்திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் பயிலும் மாணவர்கள் பலர் மலைக்கிராமங்களிலிருந்து கல்லூரிக்கு வருகின்றனர். பொருளாதார சூழ்நிலை காரணமாக அவர்கள் மதிய உணவு கொண்டு வராமல் கல்லூரிக்கு வருகின்றனர். அதனால் அவர்கள் கல்வியில் கவனம் செலுத்தாத நிலை உள்ளது. இதை அறிந்த ஐ.வி.டி.பி. நிறுவனம், மாணவர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகத்தின் பங்களிப்புடன் அம்மாணவர்களுக்கு மதிய உணவுத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. **இத்திட்டத்திற்கான ஐ.வி.டி.பி.-யின் பங்களிப்பு ரூ. 1 இலட்சமாகும்.**

## மணப்பெண் அலங்காரம், சிகை அலங்காரம் மற்றும் மெகந்தி போன்ற திறன் மேம்பாட்டு பயிற்சி

கல்லூரி கல்வியோடு மாணவியர் தங்கள் வாழ்க்கைத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் எதிர்காலத்தில் சுயதொழில் புரிந்து தங்கள் வாழ்க்கையை தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ளும் பொருட்டு **ஏலகிரி தொன்போஸ்கோ கல்லூரியில் பயிலும் 97 மாணவிகளுக்கு ஐ.வி.டி.பி. ரூ. 10,000 செலவில் மணப்பெண் அலங்காரம், சிகை அலங்காரம், மெகந்தி திறன், மேம்பாட்டு பயிற்சிகள்** வழங்கப்பட்டது. மாணவிகள் பங்களிப்பாக **ரூ. 10,000** வழங்கப்பட்டு இப்பயிற்சியை நிறைவு செய்த மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.





“ எந்த பெண்ணும் அவள் கணவனுக்கு ராணியாக இல்லாமல் இருக்கலாம்...
ஆனால் நிச்சயம் அவள் தந்தைக்கு இளவரசியாகவே இருக்கிறாள்... ”

# நீலகிரி மாவட்ட குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக

# ஐ.வி.டி.பி. ₹ 1 கோடி உதவி

தமிழகத்தின் முற்றிலும் மலைப்பாங்கான மாவட்டமான நீலகிரி அடிக்கடி மழை, நிலச்சரிவு போன்ற இயற்கை சீற்றங்களினாலும், போதுமான அடிப்படை வசதி இல்லாத நிலையாலும் பாதிக்கப்பட்டு மக்களின் தேவைகள் முழுமையாக நிறைவு செய்ய இயலாத சூழ்நிலை நிலவுகிறது. இப்பிரச்சனைகளினால் அதிகம் பாதிக்கப்படுவது குழந்தைகளே. எனவே அம்மாவட்ட மக்களின் தேவைகளை ஓரளவுக்கு நிறைவு செய்யும் பொருட்டு **நமது மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மனமுவந்து வழங்கிய சிறு தொகை ரூ. 1 கோடியாக உருவெடுத்தது.** இந்த **ரூ. 1 கோடி ரூபாயை** பயன்படுத்தி நீலகிரி மாவட்ட மக்களின் தேவையறிந்து, பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, **ஐ.வி.டி.பி. தலைவர் அவர்கள் நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப. அவர்களோடு ஆலோசித்து கீழ்காணும் திட்டங்களை இறுதி செய்து அவற்றை நிறைவேற்ற முடிவு செய்தார்.**

## இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் நல மையங்கள்











“ அண்ணன் தங்கை உறவுக்குள் பணம் காசு தேவையில்லை...
மனமும் பாசமும் இருந்தாலே போதும்... ”

# ஐந்து புதிய குழந்தைகள் நல மையங்கள் (அங்கன்வாடி) கட்டுமானம்

கடந்த ஆண்டு நீலகிரியில் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட கூடலூர் பகுதியிலுள்ள பாடன்துறை, புதூர் வயல், பந்தலூர், புலியம்பாறா மற்றும் நன்தட்டி ஆகிய கிராமங்களில் சேதமடைந்த குழந்தைகள் மையங்களை அகற்றிவிட்டு புதிய குழந்தைகள் நல மையங்கள் (அங்கன்வாடி) கட்ட முடிவு செய்து கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.









**இம்மையங்கள் ஒவ்வொன்றும்**
**ரூ. 8.87 இலட்சம் மதிப்பில் தலா 700 சதுர அடியில்**
**மொத்தம் ரூ. 44.35 இலட்சம் மதிப்பில்**
**கட்டப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.**

“ சேர்ப்பது மிகக் கடினம்... செலவு செய்வது மிக எளிது... பணம் மட்டும் அல்ல...
அடுத்தவர் உள்ளத்தில் நாம் சேர்த்து வைக்கும் நல்லெண்ணம் கூட... ”

## விடுதிகளில் தங்கியுள்ள பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர் பயன்பாட்டிற்கான

# கட்டில் மற்றும் மெத்தைகள்

நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர் துயில போதுமான கட்டில், மெத்தைகள் இல்லாத நிலையை அறிந்து, **அவ்விடுதிகளுக்கு தேவையான கட்டில்களும், மெத்தைகளும் வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி 380 ஈரடுக்கு இரும்பு கட்டில்களும் 740 உயர்தர மெத்தைகளும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 380 ஈரடுக்கு கட்டில்களில் 760 மாணவ மாணவியர் உறங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.**









**இதன் மொத்த மதிப்பு ரூ. 56 இலட்சமாகும்.**



IVDP

" நிச்சயமாக இறைவன் ஒரு சோதனைக்கு பின் நிம்மதியான வாழ்க்கையை தருவான். "



பொங்கல் விழா



ஆங்கிலப் புத்தாண்டு
கொண்டாட்டம்



தீபத்திருநாள்

# ஐ.வி.டி.பி.க்கு வருகை புரிந்த விருந்தினர்கள்



BELLA - நிறுவன விருந்தினர்கள் வருகை



LG - நிறுவன விருந்தினர்கள் வருகை



“ அண்ணன் தங்கை உறவுக்குள் பணம் காசு தேவையில்லை...
மனமும் பாசமும் இருந்தாலே போதும்... ”

# ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் கவனத்திற்கு







**குழுக்களை தர நிலைப்படுத்தும் வழிமுறையில் இவ்வாண்டு**

**''வெண்கலக்குழு'', ''வெள்ளிக்குழு'', ''தங்கக்குழு'', ''வைரக்குழு''**

**என 4 தரநிலைகள் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

| தரம் | குழுக்களை தர நிலைப்படுத்தும் வழிமுறைகள் | ஒவ்வொரு உறுப்பினரும் பெறும் வங்கி கடன் தொகை |
|---|---|---|
| வெண்கலக் குழு 40 IVDP BRONZE GROUP | 5 ஆண்டுகளாக இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab-ல் கைரேகை பதிவு செய்திருத்தல், கடன் பெறுதல், திருப்பி செலுத்துதலில் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல் | ₹ 50,000 வரை |
| வெள்ளிக் குழு 40 IVDP SILVER GROUP | 5 ஆண்டுகளிலிருந்து 7 வருடங்கள் வரை இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab-ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குநர் A★தர நிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ 60,000 வரை |
| தங்கக் குழு 40 IVDP GOLD GROUP | 7 ஆண்டுகளிலிருந்து 10 வருடங்கள் வரை இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab-ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குநர் A★தர நிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ 75,000 வரை |
| வைரக் குழு 40 IVDP DIAMOND GROUP | 10 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab-ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குநர் A★தர நிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ 1,00,000 வரை |

செயல்படாத குழு : (D) இக்குழுக்கள் எவ்வகை கடன்களும் பெற தகுதியற்ற குழுக்கள்

| தரம் | ஊக்குநர்களை தர நிலைப்படுத்தும் வழிமுறைகள் |
|---|---|
| A | குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், கடன் பெறுதல், திருப்பி செலுத்துதலில் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல். |
| A★ | குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், கடன் பெறுதல், திருப்பி செலுத்துதலில் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல், சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் மற்றும் குழுவின் அனைத்து பதிவேடுகளையும் ஊக்குநர் அல்லது குழு உறுப்பினர்களே முறையாக பராமரித்தல் |

“ சேர்ப்பது மிகக் கடினம்... செலவு செய்வது மிக எளிது... பணம் மட்டும் அல்ல...
அடுத்தவர் உள்ளத்தில் நாம் சேர்த்து வைக்கும் நல்லெண்ணம் கூட... ”

# ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் கவனத்திற்கு

## சங்கக் கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் டெபாசிட் | சங்க கடன் பெறும் தொகை (மற்ற கடன்களை பொறுத்து மாறுபடும்) | குழுவின் வயது |
|---|---|---|
| ரூ. 50,000 லிருந்து<br>ரூ. 1,00,000 வரை | ரூ. 40,000 வரை | 5 வருடத்திற்கு மேல் |
| ரூ. 1,25,000 வரை | ரூ. 50,000 வரை | 8 லிருந்து 10 வருடத்திற்கு மேல் |
| ரூ. 1,50,000 வரை | ரூ. 50,000 வரை | 10 வருடத்திற்கு மேல் |

## சிறப்புக் கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் டெபாசிட் | சிறப்பு கடன் பெறும் தொகை (மற்ற கடன்களை பொறுத்து மாறுபடும்) | குழுவின் வயது | உறுப்பினரின் மொத்த கடன் தொகை |
|---|---|---|---|
| ரூ. 25,000 | ரூ. 25,000 வரை | 2 வருடத்திற்கு மேல்<br>5 வருடம் வரை | ரூ. 60,000 வரை |
| ரூ. 50,000 லிருந்து<br>ரூ. 1,00,000 வரை | ரூ. 30,000 வரை | 5 வருடத்திற்கு மேல்<br>10 வருடம் வரை | ரூ. 60,000 வரை |
| ரூ. 1, 25,000 வரை | ரூ. 30,000 வரை | 8 to 10 வருடத்திற்கு மேல் | ரூ. 70,000 வரை |
| ரூ. 1,50,000 வரை | ரூ. 40,000 வரை | 10 வருடத்திற்கு மேல் | ரூ. 80,000 வரை |

## வங்கிக் கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் டெபாசிட் | வங்கி கடன் பெறும் தொகை (மற்ற கடன்களை பொறுத்து மாறுபடும்) | குழுவின் வயது | உறுப்பினரின் மொத்த கடன் தொகை |
|---|---|---|---|
| முதல் வருடத்தில் | ரூ. 10,000 வரை<br>ரூ. 20,000 வரை | 1 வருடத்திலிருந்து<br>2 வருடம் வரை | --- |
| ரூ. 25000 லிருந்து | ரூ. 40,000 வரை | 2 வருடத்திலிருந்து<br>4 வருடம் வரை | ரூ. 60,000 வரை |
| ரூ. 50,000 லிருந்து<br>ரூ. 1,00,000 வரை | ரூ. 50,000 வரை | 4 வருடத்திலிருந்து<br>10 வருடம் வரை | ரூ. 80,000 வரை |
| ரூ. 1,25,000 மட்டும் | ரூ. 50,000 வரை | 10 வருடத்திற்கு மேல்<br>“தங்கக்குழு” பெற்றிருந்தால் | ரூ. 90,000 வரை<br>ரூ. 1,00,000 வரை |
| ரூ. 1,50,000 மட்டும் | ரூ. 50,000 வரை | 10 வருடத்திற்கு மேல்<br>“வைரக்குழு” பெற்றிருந்தால் | ரூ. 1,00,000 வரை<br>ரூ. 1,20,000 வரை |
| ரூ. 1,00,000 லிருந்து<br>ரூ. 1,50,000 வரை | ரூ. 60,000 வரை | 5 to 7 வருடத்திற்கு மேல், 2 முறை இலாப பங்கீடு பெற்று “வெள்ளிக்குழு”விற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும். | |
| ரூ. 1,00,000 லிருந்து<br>ரூ. 1,50,000 வரை | ரூ. 75,000 வரை | 7 to 10 வருடத்திற்கு மேல், 2 முறைக்குமேல் இலாப பங்கீடு பெற்று “தங்கக்குழு”விற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும். | |
| ரூ. 1,00,000 லிருந்து<br>ரூ. 1,50,000 வரை | ரூ. 1,00,000 வரை | 10 வருடத்திற்கு மேல், 2 முறைக்குமேல் இலாப பங்கீடு பெற்று “வைரக்குழு”விற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும். | |



## கோட்டையூர் ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளிக்கு

# கலையரங்கம்

₹ 76 இலட்சம்



அஞ்செட்டி வட்டம், கோட்டையூர் மலைகிராமத்தில் செயல்படும் ஐ.வி.டி.பி. நேதாஜி மெட்ரிக் பள்ளியில் பயிலும் மாணவர்கள் தங்கள் கலை நிகழ்ச்சிகளையும் பள்ளி விழாக்களையும் திறந்த வெளியில் நடத்தி வந்தனர். மழை, வெயில் போன்ற மாறுபட்ட காலநிலையால் பள்ளியின் நிகழ்ச்சிகள் தடைபடுவதையறிந்த ஐ.வி.டி.பி. தலைவர் **திரு. குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட **ரூ. 76 இலட்சம்** மதிப்பிலான **கலையரங்கை** கட்டி வழங்கியுள்ளார்.

## ஏப்ரல் 2019லிருந்து மார்ச் 2020 வரையிலான ஐ.வி.டி.பி. குழுக்களின் விபரம்

ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள் : கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் மற்றும் வேலூர்.
ஐ.வி.டி.பி. கிளை அலுவலகங்கள் : 73

| விவரம் | மார்ச் 2020 வரை | ஏப்ரல் 2019 - மார்ச் 2020 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி.-யில் உள்ள மொத்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் | 13352 | 499 | 13851 |
| மொத்த சுய உதவிக்குழு உறுப்பினர்கள் | 247012 | 9232 | 256244 |
| ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்த சேமிப்பு | ₹ 659.80 கோடி | ₹ 112.50 கோடி | ₹ 772.30 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற இலாபப்பங்கீடு | ₹ 521.00 கோடி | ₹ 68.00 கோடி | ₹ 589.00 கோடி |

## கடன் விவரம்

| விவரம் | மார்ச் 2020 வரை | ஏப்ரல் 2019 - மார்ச் 2020 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ₹ 3345.72 கோடி | ₹ 502.00 கோடி | ₹ 3847.72 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்க கடன் தொகை | ₹ 3109.50 கோடி | ₹ 340.00 கோடி | ₹ 3449.50 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ₹ 156.38 கோடி | ₹ 28.21 கோடி | ₹ 184.59 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத்திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ₹ 170.50 கோடி | ₹ 17.22 கோடி | ₹ 187.72 கோடி |
| மொத்த கடன் சுழற்சி | ₹ 6782.10 கோடி | ₹ 887.40 கோடி | ₹ 7669.53 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி. (மே 2020 வரை)

| | |
|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம், நாட்றாம்பாளையம், தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ₹ 5.00 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ₹ 2.00 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கை பாதுகாப்பு நிதி உதவி | ₹ 32.00 கோடி |
| கார்கில் போர், குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கேரள வெள்ளம், கஜா புயல், நீலகிரி மாவட்ட வெள்ளம், கொரோனா போன்ற பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக | ₹ 5.25 கோடி |
| உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குடிசை தீ விபத்து நிதி, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தின பரிசுகள் | ₹ 0.53 கோடி |
| மருத்துவமனை, சிறைகள், குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லம், ஏழைகளுக்கு வீடு கட்டும் திட்டம், கடைநிலை பணியாளர்களுக்கு நிலைவைப்பு | ₹ 2.25 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை மற்றும் இதர கல்வி பணிகளுக்காக | ₹ 26.95 கோடி |
| ஊக்குனர்களுக்கு மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை | ₹ 6.05 கோடி |
| **கடந்த 41 ஆண்டுகளில் மனித நேயப் பணிகளுக்காக ஐ.வி.டி.பி. வழங்கிய தொகை** | **₹ 80.03 கோடி** |

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

# ஐ.வி.டி.பி. தன்னார்வ தொண்டு நிறுவனம்

ஐ.வி.டி.பி. இல்லம்,
9இ, சாந்தி நகர் 3வது கிராஸ்,
கிருஷ்ணகிரி-635 001,

04343-232 129, 236 420
francis@ivdpkrishnagiri.org
www.ivdpkrishnagiri.org